# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/45 - 2017 ජූනි මස 23 වැනි සිකුරාදා - 2017.06.23

*2024/45 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### நீதிச் சேவைகள் ஆணைக்குழு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதிய 14 ஆம் இலக்க, வர்த்தமானியின் அரசாங்க அறிவித்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கு அமைவாக II ஆவது பகுதியில் உள்ள "நீதிமன்ற அதிகாரிகளுக்கான நியமனம், பதவியுயர்வு, மற்றும் இடமாற்றம்" என்பதன் கீழ் 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் நீக்கப்பட்டு கீழ்வரும் தகைமைகள் உள்ளடக்கப்படுகின்றன.

**இலங்கை நீதிச் சேவையின்** II ஆவது வகுப்பின் I ஆவது தரத்திற்குரிய (நீதவான்) பதவி

*தகைமைகள் :*

(அ) தொழில் நியாய சபையின் தலைவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டிருத்தல் வேண்டும். அல்லது ;

(ஆ) ஐந்து வருடங்களுக்கு குறையாமல் வினைத்திறன் மிக்க முறையில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது ;

(இ) ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது ;

(ஈ) ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தைக் கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

**தொழில் நியாய சபையின் தலைவர் பதவி - தரம்** II

*தகைமைகள் :*

(அ) ஐந்து வருடங்களுக்கு குறையாமல் வினைத்திறன் மிக்க முறையில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது ;

(ஆ) ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழங்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது ;

(இ) ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

ஜி. எம். டபிள்யூ. பி. ஜயதிலக,
பதில் கடமையாற்றும் செயலாளர்,
நீதிச் சேவைகள் ஆணைக்குழு.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, யூன் 22.

7 - 207


1A - G 25780 — 10 (2017/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*